# விவசாயத் தொழில்நுட்பத் தகவல்

விவசாயத் தொழில்நுட்ப தகவல்களை விவசாயிகளிற்கு வழங்கும் ஒரு கையேடு

விவசாயத் திணைக்களத்தின் தேசிய விவசாய தகவல், தொடர்பாடல் நிலையத்தின் வெளியீடு

தொழில் நுட்ப பிரசுரம் இல. 10 – 2020 மார்ச்


# 'அனுமதியளிக்கப்படாத பீடைநாசினிகள்' தொடர்பில் எச்சரிக்கையாக இருங்கள்...

ஆரோக்கியமான, பயிர்களைப் பராமரிக்க பீடைகளைக் கட்டுப்படுத்துவது அவசியமாகும். ஆனால் அதற்காக பீடைநாசினிகளைப் பயன்படுத்தி கட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லை. இது முற்றிலும் தனிப்பட்ட ஒருவரின் முடிவாகும். பண்ணை உற்பத்திகளிற்கும், சூழலில் வாழும் பீடைகள் அல்லாத ஏனைய உயிரினங்களிற்கும் மிகக் குறைந்தளவான பாதிப்பே ஏற்படக் கூடியவாறு ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றுவதே, உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட மிகவும் சூழல் நேயமுள்ள பீடைக் கட்டுப்பாட்டு முறையாகும். இருப்பினும் பீடைநாசினிகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டமையால், 1980 ஆம் ஆண்டளவில் பீடைநாசினிகள் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் கீழ் பீடைநாசினிகள் பதிவாளர் எனப்படும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் நியமிக்கப்பட்டார். இவர் இச் சட்டத்தின் கீழ் 1983 ஆம் ஆண்டிலிருந்து தனது கடமைகளை மேற்கொண்டு வருகின்றார். சட்டத்திற்கமைவாக இறக்குமதி, பொதி செய்தல், சுட்டியிடல், களஞ்சியப்படுத்தல், கொண்டு செல்லல், விற்பனை செய்தல், பயன்பாடு தொடர்பான அனைத்து விடயங்கள் தொடர்பிலும் அவரே அதிகாரம் பெற்ற அலுவலராகக் கடமையாற்றி வந்துள்ளார்.

இவ்வாறான சட்ட ஏற்பாடுகள் இந்நாட்டில் நிலவினாலும் கூட, பதிவு செய்யப்படாத பீடைநாசினிகள், களைநாசினிகள் போன்ற பல விவசாய இரசாயனப் பொருட்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்படுவதாக பீடைநாசினிகள் பதிவாளர் 2020 பெப்ரவரி 25, 26 ஆம் திகதிகளில் வெளியிட்ட இரண்டு சிறப்பு அறிவிப்புக்களில் தெரிவித்துள்ளார். பீடைநாசினிகள் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட அனைத்து அதிகாரம் பெற்ற அலுவலர்களிற்கும், வழக்குத் தொடுப்பதற்கும், வழக்கை நடாத்த அதிகாரம் பெற்ற அலுவலர்களிற்கே இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார். இதற்காக விவசாயத் திணைக்களத்தின் மாகாணங்களிற்கு இடைப்பட்ட பிரதேசங்களினதும், மாகாண விவசாயத் திணைக்களங்களிலும் பணியாற்றுகின்ற பிரதி விவசாயப் பணிப்பாளர், உதவி விவசாயப் பணிப்பாளர் ஆகியோர் அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், மகாவலி அதிகார சபையின் கீழ் பணியாற்றும் விவசாய அலுவலர்களும், விவசாய விஞ்ஞானிகளும், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். பீடைநாசினிகள் பதிவாளரே நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான வழக்குத்தொடுக்கும் அலுவலர்களையும், வழக்குகளை நடாத்தும் அலுவலர்களையும் நியமித்துள்ளார். ஒரு வழக்கு தொடுப்பவராகச் செயற்பட்டு, வழக்குத் தொடர அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியளிக்கப்படாத இரசாயனங்களின் லேபளில் உள்ளூர் நிறுவனத்தின் பெயர் பிரசுரிக்கப்பட்டிருக்காது. அதேபோன்று பதிவிலக்கமும் குறிப்பிடப்பட்டிருக்காது. பீடைநாசினிகளின் பதிவாளர் இந் நச்சுக்கள் இந்தியாவிலிருந்து கடல் வழியாக கொண்டு வரப்பட்டு திறந்த சந்தையில் விற்கப்படுகின்றன என சந்தேகிக்கிறார். இத்தகைய அனுமதியளிக்கப்படாத இந்திய தயாரிப்புகள் சந்தையில் காணப்படுவது அனுமதிக்கப்பட்ட பீடைநாசினிகளுக்கு சவாலாக அமைவது மாத்திரமன்றி, பதிவாளரின் பங்களிப்பு சமூக ரீதியில் விமர்சனத்திற்கும் உட்படுத்தப்பட்டுள்ளது. பீடைநாசினிகள் பதிவாளரின் சமீபத்திய அனுபவங்கள் இவற்றுக்கான எடுத்துக் காட்டுகளாக அமைகின்றன.










பீடைநாசினி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கத்தரி நுனி, தண்டு துளைப்பானைக் கட்டுப்படுத்த சிபாரிசு செய்யப்பட்ட அசிட்டாமிபிரிட் 20% எஸ்.பி அடங்கியுள்ள, சட்டப்படி உற்பத்தி செய்யப்பட்ட பின்வரும் நான்கு உற்பத்திகள் அனுமதிக்கப்பட்ட வர்த்தகப் பெயர்களிலும், பதிவு எண்களிலும் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன. அவையாவன அசிட்டோ அசிட்டாமிபிரிட் (K68000), ஹொலியேஸ்டர் அசிட்டாமிபிரிட் (K680100), மொஸ்பிலான் அசிட்டாமிபிரிட் (N0200000), பவர்ஸ் அசிட்டாமிபிரிட் (N340000). நிலைமை இவ்வாறிருக்க ஹில்ப்ரிட் (HILPRID), மெஜிக் (MAGIC) என லேபள் ஒட்டப்பட்ட அசிட்டாமிபிரிட் 20% என்னும் இரசாயனப் பொருளை விற்பனை செய்வதற்கு இந்த நாட்டில் எந்தவிதமான சட்டபூர்வ அனுமதியும் இல்லை. எம்பிலிப்பிட்டிய, காலி, அம்பாந்தோட்டை, அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்ட HYDON, MAC SL ஆகிய களைநாசினிகளும் இவ்வாறு சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்டனவாகும். அவற்றை உற்பத்தி செய்யப்பட்ட நாடுகளின் சட்டவிதிகளிற்கு அமைய அங்கு அனுமதி பெறப்பட்டிருக்கலாம். ஆனால் அந்த அனுமதி எமக்கு செல்லுப்படியாகாது. இலங்கையில் தடை செய்யப்பட்ட தீவிரமான நச்சுப் பொருட்களைக் கொண்ட இரசாயன பொருட்கள் இந்தியாவில் சுதந்திரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை இரண்டு நாடுகளினதும் சட்டவிதிகளிலுள்ள நியமங்களின் வேறுபாடுகளைக் காட்டுகின்றன.





மற்றொரு உதாரணம், ஒரு காலத்தில் இந்த நாட்டில் பயன்படுத்தப்பட்ட, ஆனால் தற்போது பொதுவான பாவனையிலிருந்து வாபஸ் பெறப்பட்ட பூச்சிநாசினி மொனோகுரோட்டோபொஸ் (Monocrotophos) ஆகும். இந்நாசினியானது உலக சுகாதார நிறுவனத்தின் வகைப்படுத்தலிற்கு அமைய மிக உக்கிரமான நச்சைக் கொண்ட அபாயகரமான வகுப்பைச் சேர்ந்த பீடைநாசினி என வகைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது தென்னஞ் சிவப்பு வண்டைக் கட்டுப்படுத்த, அனுமதிப் பெற்ற தனியார் நிறுவனங்களினால் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான மொனோகுரோடோபொஸ் மாத்திரமே இறக்குமதி செய்யப்படுகின்றது. இது தென்னை ஆராய்ச்சி நிறுவனம், தெங்குப் பயிர்ச் செய்கை நிறுவனம் ஆகியவற்றின் கீழ் மேற்பார்வை செய்யப்பட்டே இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றது. மேலே குறிப்பிட்ட பயன்பாட்டைத் தவிர்த்து வேறு விவசாய நடவடிக்கைகளுக்கு மொனோகுரோடோபொசை பயன்படுத்துவதோ அல்லது விற்பனை செய்வதோ சட்ட விரோதமானதாகும். பதிவு செய்த போது, மொனோகுரோடோபோஸின் பதிவு எண் M500100 ஆகும். நிலைமை இவ்வாறிருக்கும் போது 36% மொனோகுரோடோபொஸ் அடங்கிய இரசாயனங்கள் LUPHOS 36, ANUCRON போன்ற வர்த்தகப் பெயர்களில் பிபிலை, எம்பிலிப்பிட்டிய, எத்திலிவெவ, அம்பாந்தோட்டை, அனுராதபுரம், மதவாச்சி போன்ற அதிகளவில் விவசாய நடவடிக்கைகள் இடம்பெறும் பிரதேசங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பீடைநாசினிகள் பதிவாளர் தெரிவித்தார்.

இது பற்றிய மேலதிக தகவல்களை அறிந்து கொள்வதற்கு அல்லது சட்ட விரோதமான நடவடிக்கைகள் இடம்பெறும் போது அது தொடர்பாக முறைப்பாடுகளைச் செய்ய தொலைபேசி மூலமாகவோ அல்லது தொலைநகல் மூலமாகவோ தொடர்பு கொள்ளுங்கள் என பீடைநாசினிகள் பதிவாளர் மேலும் தெரிவித்தார் (தொலைபேசி / தொலைநகல் - 081 238 8135, தொலைபேசி, 081 238 8076 கையடக்கத் தொலைபேசி – 077 23 63824).

பிரதி : சனத் எம்.பண்டார – உதவி விவசாயப் பணிப்பாளர்

தொழிநுட்ப தகவல் : கலாநிதி. ஜே. ஏ. சுமித் - பீடைநாசினிகள் பதிவாளர்,

பீடைநாசினிகள் பதிவாளர் அலுவலகம், கெட்டம்பே.

மொழிப்பெயர்ப்பும், கணணி வடிவமைப்பும் : சந்திரசேகரன் இந்துமதி

தமிழ் பிரதி செம்மையாக்கம் : சீ.பெரியசாமி

தேசிய விவசாய தகவல் தொடர்பாடல் நிலையம், கன்னொறுவை

**மேற்பார்வையும், ஆலோசனைகளும்**

**எஸ்.பெரியசாமி, பணிப்பாளர்**

**ஜ.எஸ்.எம். ஹலீம்தீன், உதவி விவசாயப் பணிப்பாளர்**

**தேசிய விவசாய தகவல், தொடர்பாடல் நிலையம், கன்னொறுவை**